978 செப்டம்பர் 11]

ஏனென்ருல், உள்ளபடியே அந்த ஐந்து கிராமங்களிலும் முஸ்லீம் மக்களே பெரும்பாலும் இருக்கின்ருர்கள். அந்த கிராம மக்களுக்கு அங்கே போக்குவரத்துத் தடையாக இருப்பதால், பெண்கள் கொடுக்கல் வாங்கல் பாதிக்கப்படக்கூடிய நிலே அனுதாபத்திற் குரியதாக உள்ளது. ஆகவே, உடனடியாக அங்கே போக்கு வரத்துக்கு துரித நடவடிக்கை எடுப்பதோடு, இடையேயுள்ள காட்டாறுக்கு மத்தியிலே ஒரு பாலம் கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலேவர் அவர்களே, போக்குவரத்துக்கு இடையூருக இருக்கின்ற காரணத்தால் மேற்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. பாலம் கட்டுவதற்கும் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

குலசேகரன்பட்டணம் பேரூராட்சி.

* வினு எண் 139—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டம் குலசேகரன் பட்டணம் பேரூராட்சி மன்றம் இரண்டு ஊராட்சி மன்றங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வரும் பேரூராட்சி மன்றத் தேர்வில் எந்த அடிப்படையில் தலேவர் தேர்வு நடைபெறும் ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம். தேர்தலுக்கு பின் நடைமுறைக்கு வரும்.

(ஆ) ஒவ்வொரு ஊராட்சிக்கும் தலேவர் தேர்ந்தெடுக்கப் படுவர்.

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள்.

* வினு எண் 140 :—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளேக் கட்டித் தர மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கார்ப்ரேஷனிடமிருந்து (ஹட்கோ) உதவியினே தமிழ்நாடு அரசு கோரியுள்ளதா ?—

(ஆ) ஆம் எனில், விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லே.

(ஆ) வினு எழவில்லே.